முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 51/2020

நாள். 16.09.2025 வா.சா.1 – திரு.ஜான்சன்

த/பெ - திரு.தேவசகாயம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) . எனக்கு சொந்த ஊர் இராதாபுரம் தாலுகா, உலகரட்சகபுரம் ஆகும். நீங்கள் என்ன வேலை செய்து வருகிறீர்கள் என்றால் இரயில்வேயில் வேலை செய்து வந்தேன். தற்போது வியாபாரம் செய்து வருகிறேன். என்ன வியாபாரம் என்றால் எலக்ட்ரானிக்ஸ் வியாபாரம் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருகிறீர்களா என்றால் 15 வருடங்களாக செய்து வருகிறேன், நீங்கள் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருவதற்கு ரிஜிஸ்ட்ரேசன் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, லைசென்ஸ் உண்டா என்றால் இல்லை.

2) சென்னையில் 1980 ம் வருடத்தில் இருந்து நான் குடியிருந்து வருகிறேன். தாவா இடத்தை பற்றி யார் மூலமாக எப்போது தெரிய வந்தது என்றால் காமராஜ் புரோக்கர் மூலமாக தெரிய வந்தது, அவர் கலந்தபனை ஊரைச் சேர்ந்தவர் ஆவார். தாவா இடம் ஆதியில் புஞ்சை, கிணறு, பம்புசெட் உள்ள விவசாய நிலம் என்றால் சரி தான். இந்த இடத்தை பற்றிய அத்தனை தஸ்தாவேஜ்களையும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.16 15:27:41 +0530

3) தாவா இடம் வடக்கு வள்ளியூர் கிராமத்தை சேர்ந்த இடம் என்றால் சரி தான். இந்த இடத்தை தவிர வேறு எந்த இடமும் உங்களுக்கு இல்லை என்றால் சரியல்ல. வேறு இடம் உள்ளது, சர்வே எண் சொல்ல முடியுமா என்றால் தெரியாது என்று சாட்சி கூறுகிறார். அந்த இடம் உங்கள் கைவசம் உள்ளதா விற்று விட்டீர்களா என்றால் கைவசம் உள்ளது. உங்களுக்கு எந்த வருடம் கிரையமானது என்றால் எனக்கு வருடங்கள் ஞாபகம் இல்லை, எழுத்து பூர்வமாக முதல் விசாரணை சாட்சியம் வாக்குமூலம் கொடுத்ததாக சாட்சி கூறுகிறார்.

4) உங்களுக்குரிய கிரைய பத்திரத்தை சூரி என்ற சூரியநாராயணன் தட்டச்சு செய்துள்ளார் என்றால் சரி தான். நீங்கள் வள்ளியூரில் அலுவலகம் எதுவும் வைத்துக் கொண்டதில்லை என்றால் சரி தான். நீங்கள் கிரையம் வாங்கிய இடம் எத்தனை சர்வே எண்ணை சேர்ந்தது என்றால் நான் ஒரே சர்வே எண்ணில் தான் சொத்தை கிரையம் வாங்கி உள்ளேன். ஆனால் பிற்பாடு உட்பிரிவுகள் செய்யப்பட்டு விட்டது. தாவா இடத்தின் சர்வே எண். 1695/9 A2 ஆகும். எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 2 ஏக்கர் ஆகும்.

5) இடத்தில் பிளாட் போட்டீர்களா என்றால் பிளாட் போட்டோம். எத்தனை பிளாட் என்றால் எனக்கு எண்ணிக்கை ஞாபகம் இல்லை. பிளாட் எந்த தெருவில் வருகிறது என்பதை காட்டு வதற்கு பிளான் உங்களிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.16 15:27:48 +0530

நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமாஎன்றால் தாக்கல் செய்ய முடியும். ஒவ்வொரு பிளாட்டும் எத்தனை செண்டு என்றால் 5 அல்லது 5 1/2 செண்டு ஆகும். இடத்தில் நீங்கள் வீடு கட்டி குடியிருந்தீர்களா என்றால் குடியிருந்தேன். அதன் எல்கை சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும் கிழக்கு பக்கம் ரோடு, தெற்கு பக்கம் காலி மனை, மேற்கு பக்கம் 1ம் பிரதிவாதி வனஜா மேரி இடம் ஆகும். வடக்கு பக்கம் நான் குடியிருக்கும் போது காலிமனையாக இருந்தது.

6) நீங்கள் குடியிருந்த இடம் யாருக்கு கிரையம் கொடுத்தீர்கள் என்றால் வாசுகி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளேன். கடைசியாக யாருக்கு பிளாட்டில் பத்திரம் போட்டுக் கொடுத்தீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் கிரையம் கொடுத்த காலத்தில் சென்னையில் குடியிருந்தீர்கள் என்றால் சரி தான். நான் பத்திரம் போடும் போது வள்ளியூர் வந்து செல்வேன், கிரைய பத்திரங்களை மேற்பார்வை பார்த்து பத்திரங்களை தட்டச்சு செய்தது சூரி என்ற சூரியநாராயணன் என்றால் சரி தான்.

7) நீங்களாக வாங்குபவர்களை தேடி பார்த்து கிரையம் கொடுத்ததில்லை என்றால் நேரில் வருவார்கள், மீடியேட்டர் மூலமாக வருவார்கள், பிற நபர்கள் மூலமாகவும் வருவார்கள். சூரி என்ற சூரியநாராயணன் மூலமும் வருவார்கள் என்றால் வருவார்கள். இந்த பிளாட்டிற்கு DTCP அப்ரூவல் கிடையாது என்றால் சரி தான். பொது இடங்களான பூங்கா மற்றும் விளையாட்டு ஸ்தலங்கள் நீங்கள்

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.09.16 15:27:54 +0530

ஒதுக்கவில்லை என்றால் சரி தான். மொத்தம் எத்தனை பிளாட் என்றால் சொல்ல முடியாது. எத்தனை தெருக்கள் என்றால் ஒரு மெயின் தெரு, ஒரு குறுக்கு தெரு ஆகும், அந்த தெருவானது 2 பக்கங்களும் ஓப்பனாக உள்ளது.

8) பிராதை எதற்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் என்னுடைய சர்வே எண்ணில் கிணறு உள்ளது, அதை அவர்கள் உரிமை கொண்டாடினார்கள், கேட்டு வந்தார்கள். நான் அந்த கிணறு ஆனது என்னுடைய 2 ஏக்கர் நிலத்திற்கு உட்பட்டது என்று கூறினேன். கிணறு இருப்பதாகவும் 1ம் பிரதிவாதி கிணற்றுக்க பிரச்சனை செய்தார் என்று உங்கள் பிராதில் நீங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரி தான். எவ்வளவு இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் 2 3/4 செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன், காலி மனை என்று கூறி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

9) இந்த சொத்து ஆதியில் சுடலையாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி தான். அது மொத்தத்தில் 11 ஏக்கர் 4 சர்வே எண்களில் உள்ளது என்றால் சரி தான். கிணறு, மின் மோட்டார் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான். முன் பத்திரங்களை பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. கிரையம் வாங்கு முன்னர் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற வில்லங்கம் எடுத்து பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அந்த சொத்தை இளம் சேகரன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.16 15:28:19 +0530

சுந்தரராஜன், அந்தோணி ஜெயராஜ், அந்தோணி செல்வகுமார், ஜெயராஜ் நாடார் ஆகியோர்கள் கிரையம் பெற்றார்கள். அவர்களுக்கும் பாகப்பிரிவினை ஆகி விட்டது என்றால் சரி தான்.

10) மேற்படி சொத்து 4 சர்வே எண்களில் 11 ஏக்கர் 33 செண்டு ஆகும். அதில் மேற்கடைய 2 ஏக்கரை தவிர மீதி நிலத்தை சுந்தரராஜன், அந்தோணி ஜெயராஜ், அந்தோணி செல்வகுமார், ஜெயராஜ் நாடார் ஆகியோர்கள் கிழக்கடைய உள்ள பகுதியை பாகம் பெற்றுக் கொண்டார்கள். மேற்படி பாகப்பிரிவினையில் மேற்கடைய 2 ஏக்கர் 21 நிலத்தை தவிர கிழக்கடைய உள்ள பகுதியில் கிணறு உட்பட பாகப்பிரிவினை செய்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

11) மேற்கடைய 2 ஏக்கர் 21 செண்டு என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தை நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான். வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் ஒவ்வொருவருக்கும் எந்தெந்த பகுதி என்று ஒதுக்கப்பட்டது என்றால் சரி தான். சுந்தரராஜன் என்பவருக்கு சர்வே எண்.1695/4 ல் 21 ஏக்கர் 2 செண்டு சர்வே எண். 1695/6 ல் 2 ஏக்கர் 14 செண்டும், சர்வே எண். 1695/7 ல் 2 ஏக்கர் 13 செண்டும், சர்வே எண்.1695/9 எல் 4 ஏக்கர் 85 செண்டும், ஆக 11 ஏக்கர் 33 செண்டில் மேற்கடைய ஏக்கர் 2 ம் தெற்கடைய 21 செண்டும் நீக்கி

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.16 15:29:03 +0530

நின்ற 9 ஏக்கர் 12 செண்டில் ஏக்கர் 3 செண்டு 4 என ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

12) வா.சா.ஆ.2 ஆவணத்தில் சுந்தரராஜனுக்கு 3 ஏக்கர் 4 செண்டு ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த பகுதியில் கிணறு காட்டப்படவில்லை என்றால் சரி தான். வடக்கு கிழமேல் பொது பாதை, கிழக்கே 2 ம் தபசில் புஞ்சை நிலம் என்றும், தெற்கே ஐரின் வெரோனிக்கா ப்ரிய லதா புஞ்சை நிலமும், மேற்கே சர்வே எண்.1695/4, சர்வே எண்.1695/9 எ, நம்பர்களின் மேற்கடைய தென்வடலாக உள்ள 2 ஏக்கர் புஞ்சை நிலம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். இதற்கு கிழக்கு உள்ள மற்ற பகுதி தான் அந்தோணி ஜெயராஜ், அந்தோணி செல்வகுமார், ஜெயராஜ் நாடார் ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டது.

13) சுந்தரராஜனுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை தான் 03.11.2006 ல் சுயம்பு என்பவர் கிரையம் பெற்றார் என்றால் சரி தான். சுயம்பு கிரையம் பெற்ற பிறகு தான் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரி தான். மேற்கடைய உள்ள 2 ஏக்கர் நிலத்திற்கு சர்வே எண். 1695/4, சர்வே எண். 1695/9 லும் இடங்கள் உண்டு, சுந்தரராஜன் வாங்கிய அதே எல்கைள் உடன் தான் சுயம்புக்கும் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரி தான். வா.சா.ஆ.3 ன் மூலம் சுயம்பு என்பவருக்கு கிரையம் கொடுத்தார், அதன் பிறகு சுயம்பு என்பவர் தான் உட்பிரிவு செய்து பட்டா வாங்கினார் என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.16 15:29:11 +0530

14) சுயம்புக்கு ஏற்பட்ட பட்டாவில் 3 ஏக்கர் 4 செண்டு கொடுக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் சுயம்புவிடம் இருந்து 2 ஏக்கர் தான் வாங்கினேன். நீங்கள் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 ஆவணத்தில் நீங்கள் 3 ஏக்கர் 4 செண்டு கிரையம் பெறப்பட்டுள்ளதாக காணப்பட்டுள்ளது என்றால் சரி தான், ஆனால் பத்திரத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது, நான் 2 ஏக்கர் தான் கிரையம் வாங்கினேன் என்று சாட்சி கூறுகிறார்.

15) நீங்கள் குறிப்பிடும் 2 ஏக்கர் சொத்து 3 ஏக்கர் 4 செண்டில் எங்கு உள்ளது என்றால் மேற்கடைய உள்ளது. உங்களக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கிணறு உள்ளதா என்றால் பத்திரத்தில் கிணறு காண்பிக்கப்படவில்லை, ஆனால் சொத்தை அளந்து பார்க்கும் போது கிணறு என் இடத்திற்கு உட்பட்டு உள்ளது. நீங்கள் கிரையம் வாங்கியது 19.09.2007 என்றால் சரி தான். கிரையம் வாங்கிய காலத்தில் நீங்கள் நிலத்தை அளந்து பார்த்து பட்டா வாங்கினீர்கள் என்றால் சரி தான்.

16) கிணறு உங்களுக்கு தரப்படவில்லை என்று உங்களுக்கு கிரையம் கொடுத்த நபரிடமோ, முன் பாத்தியஸ்தர்களிடமோ கிணறு உள்ளது என்று குறிப்பிட்டு எந்த கோரிக்கையும் அவர்களிடம் கேட்கவில்லை என்றால் சரி தான். கிணறுக்கு எலக்ட்ரிக் சர்வீஸ் மோட்டார் உண்டு என்றால் சரி தான். சாட்சி தானாக முன் வந்து எலக்ட்ரிக் கனெக்சன் பற்றி தனக்கு தெரியாது என்று கூறுகிறார். என்னுடைய

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.16 15:29:26 +0530

இடத்தை அளந்து பார்த்த போது எனக்குரிய 2 ஏக்கரும் கிணறும் வருகிறது என்று சாட்சி தானாக முன் வந்து கூறுகிறார்.

17) கிரையம் வாங்கிய காலத்தில் அளந்து பார்த்தேன். அப்போதிலிருந்து கிணறு அதே இடத்தில் இருக்கிறது, அது சம்மந்தமாக கிணற்றை பொறுத்து சட்ட பூர்வமாக முன் பாத்தியஸ்தர்களிடமோ, அல்லது மேற்கு பக்கம் உள்ள நிலத்தின் உரிமையாளர்களிடமோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி தான். நீங்கள் வாசுகிக்கு கிரையம் கொடுக்கும் போது வடக்கு பக்கம் கிணறு இருப்பதாக பத்திரத்தில் காட்டப்படவில்லை என்றால் வடக்கு பக்கம் காலி இடமும் கிணறும் உள்ளது. வாசுகி இடத்திற்கு வடக்கு பக்கம் எத்தனை அடி நீளம், எத்தனை அடி அகலம் காலி இடம் உள்ளது என்றால் அளவுகள் ஞாபகம் இல்லை.

18) வாசுகி வீட்டிற்கம் கிணற்றுக்கும் எவ்வளவு செண்டு இடைவேளி இருக்கும் என்றால் 1/2 செண்டு இருக்கும். கடைசியில் பாப்பா என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளீர்கள் மேற்கு பக்க எல்கையாக கிணறு என்று காட்டினீர்களா காலி இடம் என்று காட்டீனீர்களா என்றால் காலிமனை என்று தான் காட்டி உள்ளேன். தற்போதும் கிணறு இருக்கும் இடம் என்னுடையது, ஆனால் கிணறு இருக்கும் இடம் உங்களுக்குரியது என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் என்னை பொறுத்த வரை அது காலிமனை ஆகும்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.16 15:29:34 +0530

19) எனக்கு தனிப்பட்டா கொடுக்கப்பட்டு விட்டது. அதற்கு சர்வே எண் சொல்ல முடியுமா என்றால் சர்வே எண். 1695/9A2 ஆகும். மேற்கு பக்கம் உள்ள 2 ஏக்கர் நிலத்தில் ஒரு சர்வே எண். 1695/9A என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் கிணறு இருக்கும் பகுதியை 1ம் பிரதிவாதிக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள், **மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1, சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2, மாதிரி வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆகும்**. ஆனால் நீங்கள் வரவில்லை சூரி என்ற சூரியநாராயணன் தான் வந்தார் என்றால் சரி தான். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நீங்கள் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். உங்கள் வழக்கில் 1ம் பிரதிவாதி கிணற்றை அனுபவித்து வருவது சம்மந்தமாக வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி தான்.

(1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.09.16 15:30:06 +0530